# அரையாண்டுத் தேர்வு - 2024

12 - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

### பகுதி I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 14 x 1 =14

1, இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்.

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே

அ) அஃறிணை உயர்திணை ஆ) உயர்திணை அஃறிணை இ) விரவுத் திணை அஃறிணை ஈ) விரவுத்திணை உயர்திணை

3. வெள்ளச்சமவெளிகள் அழியக் காரணம்.

அ) பருவநிலை மாற்றம் ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

4. உவா உற வந்து கூடும்

உடுபதி இரவி ஒத்தார் – யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன் குகன் இ) ராமன், சவரி ஈ) இராமன், சுக்ரீவன்

5. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி இ) தினையளவு செய்த உதவி

6. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

7. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" – இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது.

அ) வினைப்படிமம் ஆ) மெய்ப்படிமம் இ) உருப்படிமம் ஈ) பயன்படிமம்

8. "தி கிரேட் டிக்டேட்டர்" வெளியான ஆண்டு

அ) 1930 ஆ) 1940 இ) 1950 ஈ) 1960

9. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காப்வார் ஈ) அறிவினார்

10. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது.

அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் இ) அச்சம்

11. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

12. கடையேழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும் இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

13. ஐராவதம் மகாதேவன் அவர்கள் எத்தனை ஆண்டுகள் கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்டிருந்தார்.

அ) 25 ஆ) 30 அ) 35 ஈ) 40



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. தோப்பில் முகமது மீரான் சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினம்.

அ) துறைமுகம் ஆ) கூனன் தோப்பு இ) சாய்வு நாற்காலி ஈ) இவற்றில் எதுவும் இல்லை.

பகுதி – 2

(பிரிவு 1)

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3 x 2 = 6

15.' நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது' – விளக்கம் தருக.

16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?

17. கலிவிழா ஒலிவிழா – விளக்கம் தருக

18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

(பிரிவு 2)

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. அக்காலத்து கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

20. பருவத்தே பயிர்செய் – நேரமேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றி குறிப்பு வரைக

(பிரிவு 3)

எவையேனும் ஏழனுக்கு விடை தருக . 7 x 2 = 14

22. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

தலை, தளை, தழை

24. பின்வரும் உவமைத்தொடரை சொற்றொடரில் அமைத்து எழுதுக.

உள்ளங்கை நெல்லிக்கனி போல

25. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்

26. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) வைத்து ஆ) ஈந்த

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பெருங்கடல் ஆ) தலைக்கோல்

28. சொல்லை பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்

அ) வெங்காயம் ஆ) தலைமை

29. கலைச்சொல்லாக்கம் தருக

அ) Mobile Banking ஆ) Folder

30. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.

அ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

பகுதி – III

(பிரிவு – 1)

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 =8

31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

33. அறிவின் மேன்மைப் பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?

34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயல்களையும் அட்டவணைப்படுத்துக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(பிரிவு – 2)

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 x 4 =8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக

36. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக

37. மயிலை சீனி வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

38. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை தொகுத்துரைக்கவும்.

(பிரிவு – 3)

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 =12

39. நிரல் நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்.
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்.
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

நா.காமராசன்.

41. பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

42. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக,

1. நேற்று முதல் ________( அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2. உங்களுக்கு __________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
3. முருகன்__________ ( வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
4. நம்முடைய __________ ( தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

43. தமிழாக்கம் தருக.

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.
3. Knowledge of language is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

கீழ்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார்.கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார்.அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்திய போது , அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர் தான் ' நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. ( வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி ) ஆவார்.

வினாக்கள்:

1. ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் யார் ?
2. வை.மு.கோதைநாயகியின் படைப்பாற்றலை ஊக்குவித்தவர் யார் ?
3. வை.மு.கோதைநாயகி அவர்கள் எழுதிய முதல் நாடக நூல் எது ?
4. 'கதா மோகினி ' என்று அழைக்கப்பட்ட பெண் எழுத்தாளர் யாரிடம் கல்வி கற்றார்?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) கவிதையின் நடையை கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக,

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைப்பப்படுகிறது – எவ்வாறு? விளக்குக

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) " கோடைமழை" கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4 + 2 = 6

அ) " விண்வேறு" – எனத் தொடங்கும் " இதில் வெற்றிபெற" என்னும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) " வரும் " என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com